ஈழமுரசு

# புலம்பெயர்ந்த மக்களைச் சுற்றி பின்னப்படும் வலைகள்

'சூடாக இருக்கும் போதுதான் இரும்பைக் காய்ச்சி அடிக்கவேண்டும். பிறகு சாவகாசமாக அதற்கு மெருகு கொடுக்கலாம்' என்பது ஒரு முதுமொழி. தமிழ் மக்கள் உணர்ச்சியோடு இருக்கும் வரைதான் தாயகத்தை மீட்டெடுக்க முடியும். அந்த உணர்ச்சி அற்றுப் போய்விட்டால், அல்லது அற்றுப்போக வைக்கப்பட்டால் அந்த எண்ணம் மேழெலாமல் போகலாம். இப்போது சூடேறிய தமிழர்களின் தாயக் கனவைச் சிதைப்பதற்கு தமிழ் மக்களின் மனங்களைக் குளிர்விக்கும் சில நிகழ்வுகள் நடந்தேறுகின்றன. இந்த நிகழ்வுகளை மக்கள் கவனமாக உள்வாங்காது போனால், தமிழ்களின் இறையாண்மை என்பது இல்லாமல் போய்விடும் என்பதை ஒவ்வொரு தமிழர்களும் உணர வேண்டும்.

தமிழர்களின் ஒரே பலமாக இருந்த விடுதலைப் புலிகளின் இராணுவ பலம் திட்டமிட்ட ரீதியில் சர்வதேசத்தால் ஒருங்கிணைக்கப்பட்ட நடவடிக்கை மூலம் செயலிழக்கச் செய்யப்பட்டது. இப்போது தமிழர்களின் அரசியல் பலத்தை அழிக்கும் நிகழ்வுகள் மிகவும் நுணுக்கமாக திட்டமிட்டு, தமிழர்கள் கோபம் கொள்ளாதவாறு அல்லது கிளர்ந்தெழாதவாறு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் ஒரு செயற்பாடுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிதைப்பு. பலமாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது பலமிழந்து போயிருக்கின்றது. தமிழர்களின் ஒன்று குவிந்திருந்த ஒரு அரசியல் பலம், இப்போது சிதைக்கப்பட்டு விட்டது.

அடுத்த இலக்காக இருப்பது புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் பலம். அதனைச் சிதைக்கும் முயற்சிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுவிட்டன. நண்பர்களாக இருந்தவர்களே யாரோ ஒருவரின் சொல்லைக் கேட்டு எதிரியாக மாறி மோதத் தொடங்கியிருக்கின்றார்கள். அந்த யாரோ ஒருவர் யார் என்பதை, நடக்கும் சம்பவங்களை உற்று நோக்கினாலே தமிழ் மக்களால் உணர்ந்துகொள்ள முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டைப்பை யார் பகடைக் காய்களாகப் பயன்படுத்தினார்கள், இன்று அது துண்டாகிப் போயிருப்பதற்கு யார் காரணம் என்பது இப்போதுதான் அம்பலமாகத் தொடங்கியிருக்கின்றது. இன்று புலம்பெயர்ந்த நாடுகளில் தேசியத்தின் ஒருங்கிணைவைச் சிதைப்பவர்கள் யார் என்பதையும் நளைய வரலாறு நிச்சயமாக வெளிக்கொணரும். ஆனால், அதற்கு முன் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று மிக நுட்பமாக விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரச்சாரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. முள்ளிவாய்க்காலின் அவலத்திற்கு விடுதலைப் புலிகளே காரணம் என கதைகள் பின்னப்படுகின்றன. இதில் ஈடுபட்ட போர்க் குற்றவாளிகளை மறைத்து, விடுதலைப் புலிகள் மீதும் அதன் தலைவர் மீதும் பழியைப் போடுவதில் மிகவும் நுணுக்கமான வேலைத் திட்டங்கள் அரங்கேற்றப்படுகின்றன. தமிழ் மக்களிடம் இருந்து தலைவரை அந்நியப்படுத்தி, விடுதலைப் புலிகளை வெறுக்க வைத்து ஒட்டுமொத்த அழிவிற்கான காரணமாக விடுதலைப் புலிகளை முன்னிறுத்தும் வேலைத் திட்டங்கள் பல வழிகளினூடாகவும் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கான பிரச்சார ஊடகங்கள் பல ஏற்கனவே தமது வேலைகளை கச்சிதமாகத் தொடங்கிவிட்டன.

தமிழினப் படுகொலையில் இந்தியா இருந்தது என்பதை முழுமையாக மூடிமறைத்து அண்மையில் 'தமிழினப் படுகொலைகள்' என ஒரு நூல் வெளியிடப்பட்டிருந்தது. 1958ம் ஆண்டில் இருந்து 2009ம் ஆண்டு வரைக்கும் இடம்பெற்ற படுகொலையைச் சேகரிக்க முடிந்த அவர்களால், 1987 முதல் 1990ம் ஆண்டின் ஆரம்பம் வரை இந்தியா நேரடியாக நடத்திய தமிழினப் படுகொலைகள் இடம்பெறவேயில்லை. அந்த நூலில் மிகவும் திட்டமிட்ட ரீதியில் அவை மறைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறுதான், தற்போது தமிழினப் படுகொலை என்பது விடுதலைப் புலிகள் மீதான குற்றச்சாட்டாக மாற்றி அதனைத் தமிழ் மக்கள் நம்பி அதில் விழுகின்ற வகையில் வலைகள் பின்னப்படுகின்றன. இந்த வலைக்கான நூலையும் ஊசியையும் யார் கொடுத்திருப்பார்கள் என்பதை புரிந்துகொள்ள முடியும். ஆனால், இந்த வலையை பின்னுபவர்கள் தங்களைப் புத்திஜீவிகள் என்று சொல்லிக்கொள்ளும் சில புலம்பெயர்ந்த தமிழர்கள்தான் என்பது இங்கு கவலைக்குரியது. தங்கள் கண்களைக் கொண்டே தங்கள் கண்களைக் குத்துவதை உணராமல், பசுவின் மடியை அறுத்து விட்டு, புண்ணாக்கு வாங்க காசு கொடுத்து அனுப்புபவர்களாக இவர்கள் இருக்கின்றார்கள்.

எனவே, இந்தச்சதிவலைகளை ஆரம்பத்திலேயே தமிழ் மக்கள் இனங்கண்டு அறுத்தெறியாது போனால், அதில் சிக்கி எங்களை நாங்களே அழித்துக் கொள்வதும் தவிர்க்க முடியாமலேயே போகும். இதனை அடையாளம் காணாது போனால், இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிதைக்கப்பட்டது போன்று, நாளை, புலம்பெயர்ந்த தமிழர்களின் ஒன்று திரண்ட சக்தியும் சிதைக்கப்படலாம்.

# வவுனியா தடுப்பு முகாமிலிருந்து 54 பெண்கள் பூசா சிறை முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர்



வவுனியா பம்பைமடு, செட்டிக்குளம், வலயம் 6 ஆகிய பெண்கள் தடுப்புச் சிறை முகாம்களில் இருந்து 54 பெண்கள் பூசா தடுப்புச் சிறை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். கடந்தவாரம் இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பு அதிகாரி த.கனகராஜ் எமக்குத் தெரிவித்துள்ளார்.

தடுப்பு முகாமில் வைத்து கடந்த 18ம் திகதி கைது செய்யப்பட்டு பூசா முகாமுக்கு அனுப்பப்பட்டுள்ளவர்களின் விவரங்கள் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 12 பேர், கிளிநொச்சியைச் சேர்ந்த 16 பேர், முல்லைத்தீவைச் சேர்ந்த 09 பேர், மன்னாரைச் சேர்ந்த 07 பேர், மட்டக்களப்பைச் சேர்ந்த 03 பேர், திருகோணமலையைச் சேர்ந்த 05 பேர், வவுனியாவை சேர்ந்த 02 என 54 பேர் இவ்வாறு விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, பெண்கள் தடுப்பு முகாமிலிருந்து முன்னர் பூசா முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்ட 49 பெண்களின் விவரங்கள் கடந்த வாரம் முதல் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வன்னியில் காயமடைந்த மக்களுக்கு மீண்டும் சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளபப்பட வேண்டும்

## எல்லைகள் அற்ற மருத்துவ அமைப்பு தெரிவிப்பு

வன்னியில் நடைபெற்ற போரில் காயமடைந்த பெருமளவான தமிழ் மக்களுக்கு மீண்டும் சத்திர சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என பிரான்சை தளமாக கொண்ட எல்லைகள் அற்ற மருத்துவ அமைப்பு தெரிவித்துள்ளது.

அவ்வமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது: வன்னியில் நடைபெற்ற மோதல்களில் காயமடைந்த பெருமளவான மக்களுக்கு மீண்டும் சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கான ஆரம்ப சத்திர சிகிச்சைகள் அவசர நிலைமைகளில் மேற்கொள்ளப்பட்டதனால் அவர்கள் தொற்று நோய்களுக்கு உட்பட்டுள்ளனர்.

குறிப்பாக பலர் எலும்பு தொற்று நோய்களுக்கு இலக்காகி உள்ளனர். எறிகணை சிதறல்களாலும், துப்பாக்கி சன்னங்களினாலும் ஏற்பட்ட காயங்கள் பெரும்பாலனவர்களுக்கு தற்போதுவரை குணமாகவில்லை. அவர்களின் காயங்களில் இருந்து தொடர்ந்து தொற்று நோய்கள் ஏற்பட்டு வருகின்றன. கடந்த சில வாரங்களாக பெருமளவான தமிழ் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டு வருகின்ற போதும் காயமடைந்தவர்கள் சிகிச்சைகளை பெறவேண்டியுள்ளதால் அவர்கள் தமது கிராமங்களுக்கு செல்ல முடியாது உள்ளனர்.

காயமடைந்த பல நூறு மக்கள் மீண்டும் சத்திர சிகிச்சைகளை பெறவேண்டிய நிலையில் உள்ளனர் என எல்லைகள் அற்ற மருத்துவ அமைப்பை சேர்ந்த வைத்திய நிபுணர் பற்றிக் ஹெராட் தெரிவித்துள்ளார். சத்திர சிகிச்சைகள் அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதில்லை, ஆனால் மக்களின் நீண்ட கால வாழ்க்கைக்கு அது அவசியமானது. அவர்கள் அதற்கு உடன்படவேண்டும்.

அவர்கள் அதற்காக கிழமைகளை அல்லது மாதங்களை செலவிடவேண்டியிருக்கும். இவ்வாறான சிகிச்சைகள் தொடர்பில் எமக்கு அனுபவம் உள்ளது. காயமடைந்தவர்கள் தமது கிராமங்களுக்கு திரும்பிச் செல்லும் போது சிகிச்சைகளுக்கான தேவைகள் அதிகரிக்கலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வரிச்சலுகைக்காக சர்வதேசத்திடம் சரணடைய முடியாது – சிறீலங்கா தெனாவெட்டு

ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிவரும் 'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகையைப் பெற வேண்டும் என்பதற்காக சிறீலங்காவின் சுயாதீனம், இறைமை போன்றவற்றை இழந்து சர்வதேசத்திடம் சரணடைய முடியாது என்று சிறீலங்கா அரசு தெரிவித்துள்ளது. சர்வதேச நாடுகளின் உதவிகளில் மட்டுமே நாட்டைக் கொண்டு நடத்தும் நிலையில் இருக்கும் சிறீலங்கா இவ்வாறு தெனாவெட்டாகக் கூறியிருக்கின்றது.

ஆனால், சிறீலங்காவின் உள்விவகாரம் தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் உரிமை சிறீலங்கா அரசுக்கே உண்டு என்பதை அடிப்படையாகக் கொண்டு, இந்த வரிச் சலுகையை மீளப் பெறுவதற்காக ஐரோப்பிய ஆணைக்குழுவுடன் பேச்சு நடத்தவும் தயார் என்றும் அரசு பல்டி அடித்துள்ளது. அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு: 'ஜி. எஸ்.பி.' வரிச்சலுகையை மீளப் பெறுவதில் இழுபறிநிலை ஏற்பட்டுள்ள போதிலும் அதைப் பெறுவதற்கான நடவடிக்கையில் அரசு மிகவும் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக நாம் எமது நாட்டின் இறைமையைப் பாதுகாக்க வேண்டும். இந்த வரிச்சலுகையைப் பெற வேண்டும் என்பதற்காக நாம் சர்வதேசத்திடம் சரணடைய மாட்டோம். ஒரு நாட்டின் சொந்த விவகாரத்தில் தலையிடும் உரிமை வெளியாட்கள் எவருக்கும் கிடையாது. அதைக் கவனத்தில் கொண்டே செயற்பட வேண்டும். சிறீலங்காவின் உள்விவகாரம் தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் உரிமை சிறீலங்கா அரசுக்கு மாத்திரமே உள்ளது என்ற யதார்த்தத்தின் அடிப்படையில் ஐரோப்பிய ஆணைக்குழுவிடம் பேச்சுகளை நடத்த நாம் தயார் என்றார்.

'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகை கிடைக்காவிட்டால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுவிடும் என்றோ, தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிடும் என்றோ எவரும் பயப்பட வேண்டாம். தொழிற்சாலைகளையும், உரிமையாளர்களையும், தொழிலாளர்களையும் அரசு பாதுகாக்கும் என்று அப்போது அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஆறுதல் கூறினார்.